**டிசம்பர் - 9**

**"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்". - யாக் 1.12.**

கர்த்தரோடு பலியின் உடன்படிக்கை செய்திருக்கிறவர்கள் மேலே வர அனுமதிக்கப்படுகிற ஒவ்வொரு சோதனையையும், ஒவ்வொரு துன்பம் அனுபவித்தலும், ஜீவியத்தின் ஒவ்வொரு கஷ்டமும் அவர்களை சோதித்துப் பார்க்கவும், அவர்களுடைய அன்பை சோதிக்கவும், அவர்களுடைய குணங்கள் உறுதியாக இருக்கின்றனவா, நீதியில் வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, அன்பிலே கட்டப்பட்டவர்களாயிருக்கிறார்களா அல்லவா என்று அவர்களைப் பரீட்சித்துப்பார்க்கவே குறிக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை நாம் ஞாபகத்தில் மாத்திரம் வைத்திருப்போமானால், அது இந்த எல்லா சோதனையையும், கஷ்டங்களையும், நம்முன்னிலையில் ஒரு புது வெளிச்சத்தில் வைத்து, ஒரு நல்ல போராட்டத்தைப் போராடுவதிலும், ஜெயிப்பதிலும், நமக்கு அதிகமாக உதவி செய்யும். இந்தச் சிறு சோதனைகளினாலே கர்த்தர் பேரிலுள்ள என்னுடைய அன்பையும், பக்தியையும் அவர் சோதிக்கிறார் என்றால், அவைகள் எப்படிப்பட்ட அற்பமானவைகளாயிருந்தாலும், அவைகள் எவ்வளவு முக்கியமானவைகளாயிருந்தாலும், என்னுடைய கர்த்தருக்கும் அவர் விஷயமாகவும் உள்ள என்னுடைய பரிபூரண அன்பையும் பக்தியையும் மெய்ப்பித்துக் காட்ட அவைகளை அனுகூலமான சந்தர்ப்பங்களாகக் கருதி நான் ஜாக்கிரதையுடன் அவைகளை உபயோகிப்பேன் என்று நாம் சொல்லுவோமாக. **- Z 98, 41 (R 2257).**

இந்த வாக்கியத்திலுள்ள சோதனை, பரீட்சித்துப்பார்த்தலையும், நிரூபித்தலையும் குறிக்கிறது. சோதனைகளை சந்தோஷமாகச் சகித்துக்கொண்டு அவைகளின் மத்தியில் ஜெயங்கொண்டவர்களாய் விடாமல் நன்மை செய்வதில் தரித்திருப்பதே சோதனையை சகிப்பதாகும். கிறிஸ்தவ ஜீவியம் சோதனைகள் நிறைந்ததாயிருக்கிறது. நாம் பாத்திரராக எண்ணப்படுவதற்கு முன்பு குணத்தின் எல்லாவிதத்திலும் நாம் சோதிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட்டவர்களாய் நிற்க வேண்டும். சோதனைகளை நாம் எதிர்நோக்கி இருக்கிறோமென்றால், நாம் பாக்கியவான்களாயிருக்கிறோம். ஏனென்றால், இப்படிப்பட்ட எதிர்பார்த்தல் அவைகளுக்காக நம்மை ஆயத்தம்பண்ணும். நாம் சோதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறோம் என்றால், இரு மடங்கு பாக்கியவான்களாயிருக்கிறோம். ஏனென்றால், ஜெயிப்பதற்கு இது நமக்குச் சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறது. நிறைவான வெற்றிப் பரியந்தம் உண்மையாக நாம் நம்முடைய சோதனைகளை சகித்தோமானால், நாம் மும்மடங்கு பாக்கியவான்களாயிருக்கிறோம். ஏனென்றால், நம்முடைய சோதனை வெற்றிகரமாக முடிந்த பிறகு, நாம் விரும்பிய நம்பிக்கையின் பொருள் நம்முடையதாகும். குணத்திலும், சுபாவத்திலும், **காட்சிகளிலும்**, கனத்திலும், சகவாசத்திலும், சுதந்திரத்திலும், வேலையிலும் குறிக்கப்பட்டிருக்கிற எல்லாவற்றோடும் ராஜ்யத்தின் நித்திய ஜீவன் நிச்சயமாக நம்முடையதாகும். ஒரு ஆணையினாலே தேவன் "அந்தச் சந்ததிக்கு" இதைத் தருவேன் என்று உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். "அந்த சந்ததி" தேவனிடத்தில் பிரதானமாய் அன்பு கூறுகிற பிரதிஷ்டை பண்ணினவர்களைக் கொண்டதாயிருக்கிறது.

**- P 26, 173.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோபு 5.17, சங் 94.12, 119.67.71, நீதி 3.11.12, மத் 24.13, 1கொரி 9.25, 2தீமோ 4.8, 1பேது 5.4, மத் 19.28.29, யாக் 2.5, வெளி 2.10.**

**கோபுர வாசிப்பு : Z 15, 83 (R 5650).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் எந்தச் சோதனைகளில் நான் வெற்றி பெற்றேன்? எப்படி? பலன்கள் எவை?**